**<u>O.S.No.252/2013</u>**

**<u>DW1 :</u>** திருஞானம் தேதி 02.4.2026

<u>பிவாசா 1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

வழக்கு சொத்தின் பழைய புல எண். 589/1 என்றால் சரிதான். அதன் மொத்த விஸ்தீரணம் 1.87 ஏக்கர் ஆகும். 1.87 ஏக்கர் விஸ்தீரண பூமியில் எங்கள் குடும்பத்திற்கு பாத்தியம் இருந்தது என்பதை காண்பிக்க நான் தாக்கல் செய்துள்ள பிவாசாஆ 1 ஆவணத்திற்கு முன்பு வேறு ஏதேனும் எழுத்து மூலமான ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. பிவாசாஆ 1 ஆவணத்தில் வழக்கு சொத்து அமைந்துள்ள புல எண் 589/1 காலையில் எங்கள் குடும்பத்திற்கு எந்த வகையில் சொத்துகள் பாத்தியம் என்று குறிப்பான வாசகங்கள் கண்டு எழுதப்படவில்லை என்றால் சரிதான். பழைய புல எண் 589/1 காலையில் இருந்த 1.87 ஏக்கர் விஸ்தீரண பூமி யார் யாருக்கு பாத்தியப்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். பழைய புல எண் 589/1 காலையில் என் தாத்தா சண்முகம் பிள்ளை குறிப்பிட்ட பகுதி வாடகைக்கு எடுத்து பெட்ரோல் பங்க் நடத்தி வந்தாரா என்றால் இல்லை. பழைய புல எண் 589/1 காலையில் என் தாத்தா சண்முகம்பிள்ளை மற்றும் ஒரு ஜெயகோபால்பிள்ளை ஆகியோருக்கும் இடையில் அ வ எண் 1791/1972 என்ற வழக்கு சுவாதீனம் ஒப்படைக்க கோரி நடைபெற்றதா என்றால் இல்லை. அ வ எண் 1791/1972 வழக்கு நடைபெற்ற விவரம் தெரியும் என்றும் அதை இந்த வழக்கிற்காக மறுக்கிறேன் என்றால் சரியல்ல. பிவாசாஆ 1 ஆவணத்தில் பழைய புல எண் 589/1 காலையில் பொதுவில் பூமி பாத்தியப்பட்டதாக வாசகங்கள் கண்டு எழுதப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். பிவாசாஆ 1 ஆவணத்தில் சுப்புராயபிள்ளை அவர்களுக்கு 589/1 காலையில் பொதுவில் 31 சென்ட் விஸ்தீரண பூமியும் அதே காலையில் என் தாத்தா சண்முகம்பிள்ளைக்கு பொதுவில் 31 சென்ட் விஸ்தீரண பூமியும்

பிரிந்துள்ளதாக கண்டுள்ளது என்றால் சரிதான். பிவாசாஆ 1 ஆவணத்தில் பொதுவில் என்று எழுதப்பட்டுள்ளதில் மற்ற கூட்டு பங்குதாரர்களிடம் இருந்து பிரிவினை ஆனதாக ஆவணம் எதுவும் இல்லை என்றால் சரிதான். பிவாசாஆ 2 கிரைய பத்திரம் சந்திரசேகரனுக்கு என் தாத்தா சண்முகம் பிள்ளையும் அவருடைய சகோதரரும் 39 1/3 சென்ட் விஸ்தீரண பூமியை விற்பனை செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிவாசாஆ 2 ஆவணத்திலும் 39 1/3 சென்ட் எந்த பகுதியில் விற்பனை செய்யப்பட்டது என்று குறிப்பாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பிவாசாஆ 1 மற்றும் பிவாசாஆ 2 ஒரே தேதியில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். பிவாசாஆ 1 மற்றும் பிவாசாஆ 2 சொத்தில் பழைய புல எண் 589/1 காலையில் எந்த பகுதி என்று குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் சரிதான். பழைய புல எண் 589/1 காலையில் எந்த விதமான பூமியும் எந்த காலத்திலும் பிதுராஜித வகையிலோ தனிப்பட்ட வகையிலோ பாத்தியப்பட்டதல்ல என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் பிவாசாஆ 3 வரைபடம் அரசாங்கத்தால் தயாரிக்கப்பட்ட வரைபடம் அல்ல என்று சொன்னால் சாட்சி ஆவணத்தை பார்த்து விட்டு சரிதான் என்று கூறினார். பிவாசாஆ 3 என்னால் தயாரிக்கப்பட்ட ஆவணம் என்றும் அது வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ரசீதுகள் பிவாசாஆ 6 தாவா சொத்து சம்மந்தப்பட்டதற்கான புல எண் எதுவும் இல்லை என்று சொன்னால் சொத்து வரி ரசீதில் புல எண்கள் வராது. தாவா சொத்தில் எந்த மாதிரியான கட்டுமானங்கள் உள்ளது என்பதை என்னுடைய எதிர்வழக்குரையிலும் பிரமாண வாக்குமூலத்திலும் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல சொல்லியிருக்கிறேன். நான் மேற்படி விவரங்களை குறிப்பாக சொல்லவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் பிவாசாஆ 8 ஆவணம் புகைப்படநகல் என்றால் சரிதான். பிவாசாஆ 8 ஆவணம் யார் விண்ணப்பம் செய்து யாரால் வழங்கப்பட்டது என்பதற்கான அதிகாரிகள் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். பழைய புல எண் 589/1 காலையில் சொத்துகள்

வீட்டுமனைகளாக பிரிக்கப்பட்டு வாதியின் முன்னோர்களால் 1972 க்கு முன்பே ஏற்படுத்தப்பட்டது என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். நாளது வரை கிரைய ஆவணங்களை பார்த்திருக்கிறேனா என்றால் பார்த்தது இல்லை. வாதியின் முன்னோர்களால் தாவா சொத்தின் பெரும்பாலான பகுதி விற்பனை செய்யப்பட்டு மீதி உள்ள பகுதி தான் தற்போது தாவா சொத்து என்றால் சரிதான்.

( வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)